மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, இதற்கு முன்னர் இந்த ஸ்டான்லி மருத்துவ மனையின் செஸ்ட் கிளினிக்கில் பேராசிரியராக இருந்தவரே அங்கே பணியாற்றிக்கொண்டிருக்கிறார். அவர் என்னைச் சந்தித்தபோது இந்த விவரங்களைச் சொல்லவில்லை. நண்பர் திரு. சுவாமிநாத னிடம் அந்தக் குறைகளைச் சொல்லியிருக்கக்கூடும். ஆனால் என்னைச் சந்தித்தபோது, அங்கே இந்த வசதிகள் இல்லையென்று சொல்லியிருந்தால், அவை பற்றி நான் கவனித்திருக்கக்கூடும். ஸ்டான்லி மருத்துவமனையைப் பொறுத்த வரையில், இடவசதியை இனிதான் விரிவுபடுத்த வேண்டும். இப்போது இருக்கிற இடவசதி மிக்க குறைவே ஆகும்.

Food Poisoning

* 42. *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Health be pleased to state the total number of cases of food poisoning reported to the Government Hospitals in Madras, during the calendar year 1972, monthwise ?

உணவில் நச்சுக் கலப்பு

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

1972 ஆம் ஆண்டில் (திங்கள் வாரியாக) உணவில் நச்சு கலந்ததனல் பாதிக்கப்பட்டவர்கள் மொத்தம் எத்தனை பேர் சென்னை, அரசினர் மருத்துவ மனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்?

THE HON. THIRU K. ANBAZHAGAN : A statement @ is placed on the table of the House.

Students belonging to the Vada Balija Community in Colleges

*43. *Q.*—THIRU G. SWAMINATHAN (on behalf of THIRU M. RAJAH IYER) : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(*a*) the number of students belonging to the Vada Balija Community that were granted scholarships in Colleges during 1971–72;

@ 207 ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

(*b*) the number out of those that were granted renewal of scholarships in 1972–73; and

(*c*) the reasons, if any, for the denial of renewal of scholarships?

கல்லூரிகளில் பயிலும் வடபலிஜா வகுப்பினைச் சார்ந்த மாணவர்கள்

திரு. ஜி. சுவாமிநாதன் (திரு. எம். ராஜா அய்யர் சார்பில்): மாண்புமிகு பிற்பட்டோர் வகுப்பினர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1971-72 ஆம் ஆண்டில் கல்லூரிகளில் பயிலும் வடபலிஜா வகுப்பினைச் சார்ந்த மாணவர்கள் எத்தனை பேருக்கு கல்வி உதவித் தொகை அளிக்கப்பட்டது?

(இ) அவர்களில், 1972-73 ஆம் ஆண்டிற்கு கல்வி உதவித் தொகைகள் எத்தனை பேருக்குத் தொடர்ந்து அளிக்கப்பட்டது?

(உ) கல்வி உதவித் தொகையைப் பெறுவதற்காக புதுப்பிக்க அனுப்பப் பட்ட விண்ணப்பங்கள் மறுக்கப்பட்டிருந்தால், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: (அ) மூன்று.

(இ) ஒன்று.

(உ) மீதி இரண்டு மாணவர்கள் படிப்பை முடித்துவிட்டு உதவித் தொகை புதுப்பிக்கக் கோரவில்லை.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

Tamil Nadu Youth Service Corps

* 44 *Q.*—Thiru C. V. RAJAGOPAL (on behalf of Thavathiru KUNDRAKUDI ADIGALAR): Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(*a*) whether any representations were received by the Government requesting to provide for promotional opportunities to the Graduates serving in the Tamil Nadu Youth Service Corps; and

(*b*) if so, the action taken thereon by the Government?